பக்கங்கள் 25

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 22 ஞாயிற்றுக்கிழமை 07.09.2025 | அதிர்வு 37

## உடையார்கட்டு விபத்தில் ஒருவர் பரிதாப மரணம்!

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடையார்கட்டுப் பகுதியில் நேற்று சனிக்கிழமை இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். 02▶



# ரணில் - சஜித் இணைந்தால் நாட்டுக்குப் பெரும் நன்மை

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

"முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றம் செல்லக் கூடிய சூழலையும், அதற்காக அவரைச் சுற்றி பலமான சக்திகள் உருவாகக் கூடிய சூழலையும் தேசிய மக்கள் சக்தி அரசே உருவாக்கிக் கொடுத்துள்ளது. தலைமைத்துவப் போட்டிக்கு அப்பால் ரணில் - சஜித் தரப்புக்கள் இணைந்தால் நிச்சயம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார். 03▶

# செம்மணிப் புதைகுழியில் 2 ஆம் கட்ட அகழ்வுப் பணிகள் நேற்றுடன் நிறைவு

## அடுத்த கட்டம் குறித்து 18 ஆம் திகதி முடிவு



(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் நேற்றைய தினத்தோடு நிறைவுக்கு வந்தன.

எதிர்வரும் 18ஆம் திகதி செம்மணி மனிதப் புதைகுழி வழக்கானது திறந்த நீதிமன்றில் அழைக்கப்படவுள்ள 02▶




நேற்று வவுனியா மாநகர சபை மண்டபத்தில் 'மாகாண சபையும் அதிகாரப் பகிர்வும்' என்ற கருத்துரையாடல் களம் ஒன்றை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஏற்பாடு செய்திருந்தது.

அதனோடு தொடர்புபட்ட கட்சிகளும் பிரமுகர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

உண்மையில் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் செயலாளரும், முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன்தான் இந்த நிகழ்வின் மைய ஏற்பாட்டாளர்.

வடமாகாண சபையின் நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றிய இரேனியஸ் செல்வின், முன்னாள் மாகாண காணி ஆணையாளர் 03▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# ஐ.நா. மனித உரிமை ஆணையரின் அறிக்கையை ஏற்கவே முடியாதாம்

## இப்படி இலங்கை அரசு பதில்

"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கையை ஏற்க முடியாது. ஆணையாளரின் இறுதி அறிக்கை துல்லியமாகவும் சமநிலையுடனும் அமைய வேண்டும்."

– இவ்வாறு ஜெனிவாவிலுள்ள இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பணிமனை தெரிவித்துள்ளது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது அமர்வு நாளை ஆரம்பமாகின்றது. இதில் சமர்ப்பிக்கப்படவுள்ள ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை தொடர்பிலேயே ஜெனிவாவிலுள்ள இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பணிமனை மேற்கண்டவாறு கூறியுள்ளது.

"ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 57/1 தீர்மானத்தை இலங்கை ஏற்றுக்கொள்ளவில்லை.



இந்தத் தீர்மானத்தின் கீழ் செயற்படுத்தப்படும் பொறுப்புக்கூறல் திட்டத்தை நாம் தொடர்ந்து எதிர்க்கின்றோம். இதுபோன்ற வெளிப்புறத் திட்டங்கள் உள்நாட்டு நல்லிணக்க முயற்சிகளுக்குத் தீங்கு விளைவிக்கும்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துடனும் அதன் நிரந்தர மனித உரிமைகள் பொறிமுறைகளுடனும் இலங்கை நெருக்கமான ஒத்துழைப்பைப் பேணி வருகின்றது. இதனால், இலங்கை தொடர்பான மனித உரிமைகள் ஆணையாளரின் இறுதி அறிக்கை துல்லியமாகவும் சமநிலையுடனும் அமைய வேண்டும்." – என்றும் ஜெனிவாவிலுள்ள இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பணிமனை குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், நாட்டின் மனித உரிமைகள் நிலைமையை மேம்படுத்த இலங்கை அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள், தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் குறித்தும் அந்த அறிக்கை விவரித்துள்ளது.

முன்னதாக, இராணுவம் மற்றும் படையினரின் மோசமான மனித உரிமைகள் மீறலை இலங்கை அரசு ஒப்புக்கொள்ளத் தவறிவிட்டது. இலங்கை ரோம் சட்டத்தில் கையெழுத்திட வேண்டும் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை வலியுறுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# வெளிவிவகார அமைச்சர் இன்று ஜெனிவா பயணம்

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை ஜெனிவாவுக்கு விமானம் மூலம் பயணமாகின்றார்.

அமைச்சருடன் ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி



தயானி மெண்டிஸ்/ம் செல்லவுள்ளார்.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத் தொடர் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இதில், மதியம் ஒரு மணியளவில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உரையாற்றுவார் என்றும் தெரியவருகின்றது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### உடையார்கட்டு...

யாழ்ப்பாணத்தில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள், எதிர்த்திசையில் வந்த மற்றொரு மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

இதன்போது மோட்டார் சைக்கிள் ஒன்றின் செலுத்துநர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும், இன்னொருவர் காயமடைந்து தர்மபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

### செம்மணிப் புதைகுழியில்...

நிலையில் மூன்றாம் கட்ட அகழ்வுகளுக்கான பாதீடு தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

செம்மணி – சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் இறுதி நாளான 45ஆம் நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது.

ஏற்கனவே அடையாளம் 4 மனித என்புத் தொகுதிகள் நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்டன.

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 54 நாட்கள் இடம்பெற்ற அகழ்வுப் பணிகளில் தடயவியல் அகழ்வாய்வுத் தளம் ஒன்று மற்றும் இரண்டில் இருந்து மொத்தமாக 240 மனித என்புத் தொகுதிகள் அடையாளப்படுத்தப்பட்டிருந்தன. அவற்றில் 239 மனித என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. மேலும் குவியல்களாக 14 மனித எச்சக் குவியல்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இவை சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையாவிடம் ஆய்வுக்காகக் கையளிக்கப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியிள் இருந்து இதுவரை 72 சான்றுப்பொருட்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டு நீதிமன்றக் கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் 13 மீற்றர் நீளமும் 11 மீற்றர் அகலமும் கொண்டதாக தடயவியல் அகழ்வாய்வுத்தளம் ஒன்று காணப்பட்டது. தொடர் அகழ்வுப் பணிகளின் பின்னர் 23 மீற்றர் 40 சென்ரிமீற்றர் நீளமும் 11 மீற்றர் 20 சென்ரிமீற்றர் அகலமும் கொண்டதாக அது விஸ்தரிக்கப்பட்டது.

சிந்துப்பாத்தி இந்து மயானத்தில் இடம்பெற்ற ஜி.பி.ஆர். ஸ்கான் அறிக்கைகளின் பிரகாரம் மேலும் குறைந்தது எட்டு வாரங்கள் வரை செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ நீதிமன்றத்துக்குச் சுட்டிக்காட்டிருந்தார்.

இந்நிலையில் எதிர்வரும் 18ஆம் திகதி செம்மணி மனிதப் புதைகுழி வழக்கானது திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்படவுள்ள நிலையில் மூன்றாம் கட்ட அகழ்வுகளுக்கான பாதீடு தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இரகசியம் பரகசியம்...**

க.குருநாதன், எழுத்தாளர் கருணாகரன் ஆகியோரே வளவாளர்களாகப் பங்கு பற்றினர்.

நிகழ்ச்சி தொடங்கும் சமயத்தில் அழையா விருந்தினர்களாக இருவர் திடீரென வந்தனர். ஏற்பாட்டாளர்களுக்கு ஆச்சரியம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வைத்தியர் சத்தியலிங்கம், தமிழரசுக் கட்சியின் தற்போதைய பொதுச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரே அந்த இருவரும்.

அவர்களை ஓடோடி வரவேற்ற ஏற்பாட்டாளர்கள், உடனடியாகவே மேடையில் அவர்களுக்கு இடம் அளித்து, உரையாற்றவும் வாய்ப்பளித்தனர்.

சுமந்திரன் நல்ல ஓர் உரையை ஆற்றினார் என்றும் கூறப்படுகின்றது.

சத்தியலிங்கம் – சுமந்திரன் தரப்பின் இந்தச் சூட்சுமமான நகர்வில் ஓர் அரசியல் தந்திரம் பொதிந்திருப்பதாகத் தோன்றுகின்றது.

உள்ளூராட்சித் தேர்தலில் தங்களை எதிர்த்துப் போட்டியிட்ட அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உட்பட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியோடு(சைக்கிள் தரப்போடு), ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியினர் (சங்கு தரப்பினர்) தேர்தலின் பின்னர் அணி சேர்ந்து தமிழரசு கட்சிக்கு எதிராகவும் செயல்பட்டனர்.

சங்கும் சைக்கிளும் தங்களுக்குள் மாகாண சபை தொடர்பில் கருத்து நிலை வேறுபாடு இருந்த போதிலும் உள்ளூராட்சி அதிகாரங்களை தமிழரசு கட்சியிடம் இருந்து கைப்பற்றும் ஒரே சுயநல நோக்கோடு தங்களுக்குள் இணைந்து காரியமாற்றின. இப்போதும் சேர்ந்து நிற்கின்றன.

இப்போது மாகாண சபைக்கான அதிகார பகிர்வு குறித்து சங்கு அதிகம் கவனிப்பை வெளியிட, நிச்சயமாக அங்கு சைக்கிள் தரப்பு பிரசன்னமாகாது என்று ஊகித்துக் கொண்டு அந்த இடத்துக்குள் புகுந்திருக்கிறது தமிழரசு கட்சி. அதன் மூலம் சைக்கிளோடு சேர்ந்து ஓடுவதை விட வீட்டோடு இணைந்து செயல்படுவது உசிதமானது என்ற செய்தியை சங்கின் சில தரப்புகளுக்கு உணர்த்துவதற்காகவே இந்த காய் நகர்த்தல் என்று நான் நினைக்கின்றேன்.

வரப்போவது மாகாண சபை தேர்தல். மாகாண சபையை – அதன் அதிகாரங்களை – அதிகம் பயன்படுத்தும் விடயத்தில் சைக்கிளை விட, வீடு பொருத்தமானது என்பதை சங்குக்கு புரிய வைப்பதும் வீட்டின் நோக்கமாக இருந்திருக்கலாம். அந்நிகழ்வில் சுமந்திரனின் பேச்சின் இடையே அந்தக் கருத்தியல் இழை ஓடியதை அங்கிருந்த செல்வம், சுரேஷ், சந்திரகுமார் போன்ற சங்குத் தலை(வர்)கள் நன்கு அவதானித்து இருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

* * *

இரண்டு, மூன்று நாள்களுக்கு முன்னர் ஒரு சம்பவம் நடந்தது.

உடுவிலில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கத்தின் நினைவு நிகழ்வில் சுமந்திரன் உரையாற்றினார். வழமைக்கு மாறாக, தமது உரையை அவர் ஏற்கனவே தயாரித்து, எழுதி, எடுத்து வந்து வாசித்தார். அதன் பிரதிகளை முக்கியமானவர்களுக்கும் அவர் கையளித்தார்.

அது பற்றிய காணொளிப் படங்களை பார்த்ததும் எனக்கு ஒரு விடயம் நினைவில் பொறி தட்டியது. நான் உடனடியாகவே சுமந்திரனுக்கு அழைப்பு எடுத்தேன்.

"வடக்கு முதலமைச்சர் பதவிக்குக் கண் வைத்ததுமே அந்தப் பழக்கவழக்கம் உங்களுக்கும் வந்து விட்டதா?" என்று எடுத்த எடுப்பில் கேட்டேன். அவருக்கு விளங்கவில்லை.

"என்ன கேட்கிறீர்கள்?" என்றார் அவர்.

"வடக்கு மாகாண சபைக்கு முதல்வராக இருந்தவர் ஒரே ஒருவர்தான். நீதியரசர் விக்னேஸ்வரன்தான். அவர் இருந்த அந்தப் பதவிக் கதிரைக்கு நீங்கள் இலக்கு வைத்ததும், அவரைப் போலவே எழுதி, எடுத்து வந்து உரைகளை வாசிக்கும் பண்பு உங்களுக்கும் வந்துவிட்டதே!" என்றேன் நான்.

அவர் கெக்கட்டமிட்டு விழுந்து விழுந்து சிரித்தார். அதைத் தவிர, அவ்விடயத்தில் அவருக்குப் பதில் கூற எதுவும் இருக்கவில்லை.

---

**ரணில் - சஜித்...**

பண்டாரவளை பிரதேசத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"சமூகத்தில் கிடைக்கும் வெற்றியை நாட்டுக்கான வெற்றியாக மேம்படுத்த வேண்டும். எம்மால் உருவாக்கப்படுவதை யாராலும் தகர்த்துக் கொண்டு செல்ல முடியாது.

அவ்வாறு தகர்த்தால் அது நாட்டின் நன்மைக்காகவே இருக்க வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைத்துவமும் அக்கட்சியும் உருவாக்கப்பட்டதற்கான நோக்கம் என்ன என்பதை முழு நாட்டு மக்களும் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியை கைவிட்டுத்தான் ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி மீது முன்வைக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள், அதனால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட வெறுப்பின் காரணமாகவே அவற்றுடன் தொடர்பற்றவர்கள் அந்தக் கட்சியில் இருந்து வெளியேறி ஐக்கிய மக்கள் சக்தியைக் கட்டியெழுப்பினர். ஆனால், இன்று என்ன நடந்துள்ளது?

ஐ.தே.கவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மீது முன்வைக்கப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் புதிதாக கூறுவதற்கு எதுவும் இல்லை. அவற்றில் பிரதானமானது மத்திய வங்கி பிணைமுறி மோசடியாகும்.

ஆனால், இன்று இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பும் போது பிரதமரால் அந்தக் குற்றச்சாட்டு மறுக்கப்படுகின்றது. இவற்றின் மூலம் வாக்காளர்களான மக்கள் உண்மை நிலைவரத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். நாட்டுக்கு அரசியல் ரீதியில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

ராஜபக்ஷக்கள் தொடர்பில் கடுமையான ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தவர்கள் இன்று ரொக்கட் மூலம் நட்டம் ஏற்படவில்லை, இலாபம் கிடைத்ததாகக் கூறுகின்றனர்.

இதனால் இழைக்கப்பட்டுள்ள அநீதிக்கான நீதியைப் பெறுவதற்கு ஐ.தே.க., ஐக்கிய மக்கள் சக்தி இணைந்து பயணிக்க வேண்டும். ரணிலா, சஜித்தா என்ற போட்டிக்கு அப்பால் இந்தக் கூட்டணி நாட்டுக்கானதாக அமைய வேண்டும். அதனை விடுத்து இதன் மூலம் குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முயற்சித்தால் அதனை அனுமதிக்க முடியாது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் மீண்டும் நாடாளுமன்றம் செல்லவுள்ளதாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தெரிவிக்கவில்லை. ஆனால், அவர் நினைத்தால் மீண்டும் நாடாளுமன்றம் செல்வதற்கான சூழலை உருவாக்க முடியும். அவர் இதற்கு முன்னர் நாடாளுமன்றம் சென்று பிரதமராகி பின்னர் ஜனாதிபதியானதன் பின்னர் ஊழல், மோசடிக்காரர்கள் பாதுகாக்கப்பட்டனர் என ஜே.வி.பி. குற்றம் சுமத்தியது. ஆனால், இன்று வரை அவற்றை நிரூபித்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஜே.வி.பி. அரசு தவறியுள்ளது.

தேர்தலுக்கு முன்னர் அநுரகுமார திஸாநாயக்கவிடம் இருந்த கோப்புக்கள் இன்று இல்லை. அதேவேளை, ரணில் நாடாளுமன்றம் செல்லக் கூடிய, அவரைச் சுற்றி பலமான சக்திகள் உருவாகக் கூடிய சூழலை இந்த அரசே உருவாக்கிக் கொடுத்தது.

மக்களால் நிராகரிக்கப்பட்ட தலைவரை மக்களே மீண்டும் தேடும் சூழல் ஏற்படுவதற்கு அரசின் செயற்பாடுகளே காரணம். எவ்வாறிருப்பினும் நாட்டைக் கட்டியெழுப்பக் கூடிய இயலுமை சஜித், ரணில் தரப்புக்கள் இணைந்தால் மாத்திரமே சாத்தியமாகும்.

மஹிந்த, கோட்டா, பஸிலால் முடியாமல் போன, அநுர பொறுப்பேற்காத நாட்டை ரணில் பொறுப்பேற்றுக் கட்டியெழுப்பினார் என்பதை யாராலும் மறுக்க முடியாது. எனவே, அவரது அனுபவம், அறிவைப் பெற்ற சஜித், ஹர்ஷ, எரான், கபிர் உள்ளிட்ட குழுவினரால் நிச்சயம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். எவ்வாறிருப்பினும் அதற்கு முன்னர் ஐக்கிய மக்கள் சக்தியில் இடம்பெற வேண்டிய மறுசீரமைப்புக்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்." – என்றார்.



# 40 ஆயிரம் மெட்ரிக் தொன் நெல் கொள்முதல் நெல் சந்தைப்படுத்தல் அதிகார சபை தகவல்

அரசாங்கத்தின் நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் 40 ஆயிரம் மெட்ரிக் டன்னுக்கும் அதிகமான நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, அம்பாறை மாவட்டத்திலிருந்து அதிக அளவு நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக அதன் தலைவர் மஞ்சுள பின்னலந்த தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட அறுவடையில் 85 சதவீதம் தற்போது நிறைவடைந்துள்ளது.

அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களிலும் நெல் கொள்முதல் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நெல் கொள்முதல் செய்வதற்கான முதல் கட்டத்திற்காக அரசாங்கம் 60 ஆயிரம் மில்லியன் ரூபாயை ஒதுக்கியுள்ளது.

அதில் 55 ஆயிரம் மில்லியன் ரூபாய் விவசாயிகளுக்குச் செலுத்தப்பட்டுள்ளதாகவும் நெல் சந்தைப்படுத்தல் அதிகார சபையின் தலைவர் மஞ்சுள பின்னலந்த தெரிவித்தார்.



# சஷீந்திர ராஜபக்ஷ வைத்தியசாலையில்

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக் ஷ சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

22 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் போது தீக்கிரையாக்கப்பட்ட செவனகல – கிரிப்பன் வேவ பகுதியில் உள்ள அரசாங்க நிலத்திற்கு மற்றொரு நபர் மூலம் இழப்பீடு பெற்ற சம்பவம் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக் ஷ நுகேகொடை பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து லஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் ஓகஸ்ட் 06 ஆம் திகதி காலை கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட சஷீந்திர ராஜபக் ஷ கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சஷீந்திர ராஜபக் ஷ சார்பாக தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுவையும் நீதிமன்றம் நிராகரித்தது.

இந்நிலையில், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சஷீந்திர ராஜபக்ஷ உடல்நலக்குறைவு காரணமாக சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அதிகரிக்கும் வன்முறை

நேற்று 12 மணி நேரத்தில் நாட்டின் பல பகுதிகளிலும் நடந்த நான்கு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். ஒருவர் காயமடைந்துள்ளார் எனப் பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

அதனடிப்படையில் இவ்வாண்டில் இதுவரையில் 96 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தத் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் 50 பேர் உயிரிழந்துள்ளமையுடன், 53 பேர் காயமடைந்துள்ளனர் என்வும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

பாதாள உலக கும்பல்கள், போதைப் பொருள் வர்த்தகத் தரப்புகள் போன்றவற்றுக்கு இடையிலான மோதல்களின் வெளிப்பாடுகளே இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் என்று அண்மைக் காலத்தில் அத்தகைய சம்பவங்கள் தீவிரமடைந்து வருகையில் பாதுகாப்பு தரப்பினால் விளக்கம் கூறப்பட்டு வருகின்றது.

ஆனால் பாதாள உலகக் கும்பல்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தல் மற்றும் வர்த்தக குழுக்களை அடியோடு கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றன என்றும், அவற்றில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளன என்றும் அரசு அறிவித்து வருகின்றது.

வெளிநாட்டில் இருந்தபடி உள்நாட்டுக்குள் பாதாள உலகக் குழு செயற்பாடுகளையும் வன்முறை நடவடிக்கைகளையும் தூண்டி, வழிநடத்தி, முன்னெடுத்து வந்த பாதாள உலகக் குழுக்களின் தலைவர்களை வெளிநாடுகளில் வைத்தே மடக்கிக் கைது செய்து, நாட்டுக்குள் கொண்டு வந்திருப்பதாக ஆளும் தரப்பில் பெருத்த ஆரவாரங்கள் காட்டப்படுகின்றன. அந்த நடவடிக்கை மூலம் பாதாள உலகக் குழுக்களின் முதுகுத்தண்டையே தகர்த்து விட்டமை போன்ற எடுப்பு ஆளுந்தரப்பினால் காட்டப்பட்டு வருகின்றது.

ஆனால் இவ்வாறு பாதாள உலகக் குழுக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மும்முரமாகவும், ஆக்கபூர்வமான திசையிலும், மேம்பட்ட வகையிலும் முன்னெடுத்துள்ளோம் என்று அரசு அறிவித்துள்ள போதிலும், அதன் விளைவாக அந்த குழுக்களினால் முன்னெடுக்கப்படும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் குறைந்தபாடாகத் தெரியவில்லை. மாறாக, அவை மேலும் அதிகரித்து, மேலும் சூடு பிடிக்கின்ற கதைதான் வெளிப்படுகின்றது.

அப்படியானால் பாதாள உலகக் குழுக்களின் முதுகை முறித்து விட்டோம், போதைப்பொருள் கடத்தல் வர்த்தக கும்பலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டோம் என்ற மாதிரியாக ஆளுந்தரப்பினால் விடப்படும் கயிறுகள் பொய்யா என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.

நாம் இப்பத்தியில் பல தடவைகள் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டி வருகின்றமை போல, வடக்கு - கிழக்கு தமிழர் தாயக பிரதேசத்தை ஆக்கிரமித்து அடக்கி வைத்திருக்க வேண்டும் என்பதற்காக இந்தப் பிரதேசங்களில் குவிக்கப்பட்டுள்ள இராணுவம் உட்பட முப்படையினரை பாதாள உலகக் குழுக்களின் உச்ச செயல்பாடுகள் இடம்பெற்று வரும் தென்னிலங்கைக்குள் நகர்த்தினால் மட்டுமே அத்தகைய வலிமையான படைத்தரப்பின் பின்னணியோடு பாதாள உலகக் குழுவினரின் முதுகை முறிக்க முடியும்.

தமிழர் தேசத்தை அடக்கி, அடிமைப்படுத்தி வைத்திருப்பதற்காக இந்தப் பாதாள உலகம் குழுவினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க இயலாது திராணியற்று இருக்கின்றது அரசு. அதனையே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பான புள்ளிவிவரங்கள் உறுதிப்படுத்தி நிற்கின்றன.

# இந்தியாவைச் சீண்டுகிறாரா அநுர?



வி.எஸ்.சிவகரன்

பிராந்திய வல்லரசு எனும் அதிமேதாவித் தனத்துடன் தம்மை வெளிக்காட்டிக் கொள்ளும் பாரத தேசம் பெரியண்ணன் மனநிலையுடன் நடந்து கொள்கிறதா என்கின்ற கேள்வி அதனைச் சூழ உள்ள சிறிய நாடுகள் மத்தியில் உண்டு.

இந்தியா தனது இராஜதந்திர – இராஜீக அணுகு முறையில் பல்வேறு விதமான பிறழ்வுகளை ஏற் படுத்தியதன் விளைவால் அருகில் உள்ள எந்த சிறிய நாடும் கூட இந்தியாவை அனுசரித்துப் போகக்கூடிய மனோநிலையில் இல்லை.

நேச நாடுகள் என்கின்ற உறவு நிலையில் கூட இராஜதந்திர அணுகுமுறையை ஏற்படுத்தியன வாகவும் இல்லை.

பாகிஸ்தான், மியான்மார், பங்களாதேஷ், மாலை தீவு, நேபாளம், இலங்கை போன்ற நாடுகளுடன் மிகப் பிணைப்பான ஐக்கிய உறவு காணப்பட வில்லை. காலத்துக்கு காலம் நலனியல் சார்ந்த உறவுதான் மேம்படுத்தப்படுகிறதே தவிர, உளப் பூர்வமான உறவாடல்கள் வெளிப்படுவதில்லை. இந்த நாடுகளில் பலவற்றுக்கும் பல்வேறு விதமான உதவிகளை இந்திய அரசு மேற்கொண்டாலும் கூட அவையும் உண்மையான நன்றியுணர்வை வெளிப்படுத்துவனவாக இல்லை.

இதில் இலங்கையுடனான பிணைப்பு என்பது மிக வலிமை உடையதாக இந்தியா தனக்குள் எண்ணினாலும், சிறிமா – சாஸ்திரி உடன்படிக்கை, இலங்கை – இந்தியா உடன்படிக்கை எனல் பல உடன்படிக்கைகளை மேற்கொண்டாலும் கூட, இலங்கை அரசு அதன் விசுவாசத்தை இந்தியா வுக்கு முழுமையாக வெளிப்படுத்தியதில்லை.

சீனாவுடன் சமநிலை உறவை பேணத் தவற வில்லை. பல சந்தர்ப்பங்களில் இந்தியாவை இலங்கை அரசு பட்டவர்த்தனமாகவே அவமதித் துள்ளது. ஏமாற்றத்துக்கு உட்படுத்தியது. நம்பிக் கையைத் தகர்த்தது. எதிர்பார்ப்பை இல்லா மல் செய்தது. அவ்விதமான நெருக்கடியான அணுகு முறையிலும் இந்தியா இலங்கையுடன் முழுமை யாகப் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை. ஏனெனில் பகைத்தால் சீனாவோடு ஐக்கியமாகி இலங்கை அதனிடம் சரணாகதி அடைந்து விடலாம், கொழும்பு – பீஜிங் உறவு வலிமை அடைந்தால் இந்தியாவினுடைய கடல் மார்க்க தேசிய பாது காப்புக்கு அது குந்தகமாக அமையலாம் என இந்தியா கணக்குப் போட்டிருக்கும்.

தென்னாசியப் பிராந்தியத்தில் ஓரளவு பொருளா தார வலுச் சமநிலையில் உள்ள இரு நாடுகள் தமது தேசிய பாதுகாப்பை முதன்மையாக கருது வார்கள். ஆனால் தற்பொழுது அமெரிக்க ஜனாதி பதியினுடைய பொருளாதார வரி விதிப்பு முரண் நகையால் இந்தியா – சீனா – ரஷ்யா – பிரேசில் போன்ற முன்னணி நாடுகள் ஒன்றாக தமக்குள் இணைந்து வர்த்தகத்தில் ஈடுபட முனைவது, தமக் குள் இருக்கும் பகைமையை தளர்த்திக் கொள்ள முனைவதாகவே அண்மைய பேச்சு வார்த்தை களும் அணுகுமுறைகளும் வெளிப்படுத்துகின் றன.

அவை எவ்வளவு தூரம் இணைந்து பயணிக்கப் போகின்றன என்பது எதிர்கால நகர்விலேதான் தங்கி இருக்கும்.

இந்தியாவைப் பொறுத்தவரை வடக்கு – கிழக்கில் உள்ள தமிழர்களின் ஏக போக பாதுகாவலர்கள் என்பதை அரசியல் தேவைக்காக இலங்கையின் பிடிமானத்தை தனதாக்கிக் கொள்வதற்கு பயன் படுத்துவதும், இந்தியாவில் இருந்து மலையகப் பகுதிகளில் தேயிலை தோட்டங்களுக்கு வந்த வர்களை இந்திய வம்சவழியினர் எனும் போர்வை யிலே அதிகாரமிட நினைப்பதும் ஒரு வகையில் உரிமை இயல் சார்ந்த பார்வையாக நோக்கப்பட்டா லும், சுயாதீனமான தனித்துவ அடையாளம் கொண்ட நாடுகளில் இவ்விதமான மேலிடை அதிகாரத் திணிப்பை உட்படுத்துவது இறைமை உணர்வுகளை கேள்விக்கு உட்படுத்துவதாகவே அமையும்.

அரசற்ற தரப்புகளாகிய ஈழத் தமிழர்கள் மீது கரிசனை காட்டாத இந்தியா, இறுதி யுத்தம் வரை யிலும் இலங்கைக்குப் பல்வேறு விதமான உதவி களை வழங்கி, முள்ளிவாய்க்கால் இன அழிப்புக்கும் பங்காற்றியதுடன், அதற்கு பின்னரும் பல்வேறு விதமான அபிவிருத்திக்கும் துணை நின்றது. ஐக் கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தின் இலங்கை தொடர்பான தீர்மான விடயத்திலும், தீர் மான நகலை நலிவுறுத்துவதிலும் இந்தியாவின் பங்கு குறைத்து மதிப்பிடக் கூடியது அல்ல. ஏனெ னில் தானும் இனப்படுகொலையின் பங்குதாரர் என்பதனால் இலங்கை அரசைச் சேர்ந்து பாது காக்க வேண்டிய தேவையும் இந்தியாவிற்குள் ளது.

நிர்வாக ரீதியாக இந்திய அரசு தன்னுடைய அதிகார இருப்பையும், அதன் மீது செல்வாக்கு

தொடர்ச்சி ▼

# இந்தியாவைச் சீண்டுகிறாரா அநுர?



தொடர்ச்சி ▲

செலுத்துகின்ற காரணிகளையும், அவர்களோடு ஒத்திசைந்து போகக்கூடிய சில பல மனிதர்களையும் தம்வசம் ஈர்த்துள்ளது. பொருளாதார ரீதியாக இலங்கை நலிவுற்ற சந்தர்ப்பத்திலும் பல்வேறு விதமான உதவிகளை வழங்கி இலங்கையை அதிலிருந்து மீளுவதற்கு வழி செய்தது.

எந்த உதவிவிக்கும் இலங்கை அரசு நன்றி விசுவாசத்தை வெளிப்படுத்துவதாக இல்லை. கொழும்பு முனையத்தில் அதானியின் வகிபாகம், மன்னார் காற்றாலை விவகாரம், வடகிழக்கு மற்றும் மலையகம் போன்ற பகுதியில் பல திட்டங்களை முன்னெடுக்கின்றமை, தமிழ்த் தேசிய அரசியல் வாதிகள் எனச் சொல்லப்படுபவர்களோடு காலத்துக்கு காலம் ஐக்கியமான உறவை பேணுவதும், வடகிழக்குக்கு மாத்திரமன்றி பௌத்த விகாரைகளை புனரமைப்பதற்கு நிதி வழங்கியதிலும் கூட இந்தியா பின்னிற்கவில்லை.

இலங்கையிலே பௌத்த தேசியவாத கடுங்கோட்பாட்டாளர்களில் ஒரு பகுதியினர் இந்திய எதிர்ப்பு வாத மனோ நிலையில் நீண்ட காலமாக திகழ்கின்றனர். குறிப்பாக ஜே.வி.பி. இந்திய எதிர்ப்பு வாதத்தை மிகக் கடுமையாக கடைப்பிடித்த கட்சியாகும். அவ்விதமான பாரம்பரிய சித்தாந்தத்திலிருந்து வெளிவந்தவர்கள் இந்தியாவோடு அனுசரித்துப் போகக்கூடிய பக்குவத்தை வளர்த்துக் கொண்டார்களா என்கின்ற கேள்வி உண்டு.

நல்லாட்சி அரசை உருவாக்கியதிலும் ரணிலை ஜனாதிபதி ஆக்கியதிலும் இந்தியாவுக்கு பங்கு உண்டு என்கின்ற விமர்சனம் இல்லாமல் இல்லை. அவ்வாறான கள யதார்த்தத்தம் உண்டு.

இலங்கை அரசு அதானியின் காற்றாலை அமைக்கும் திட்டத்திலிருந்து மின் கொள்வனவு விலையில் அதிகளவு என்பதனால் அவ்விலைக்குக் கொள்வனவு செய்ய முடியாது என முரண்பட்டு காற்றாலை திட்டத்தை நிறுத்தியது போல், சீனாவோடு வலிமையான உறவைப் பேண முற்பட்டு, இந்தியாவைச் சீண்ட முனைவது போல் இலங்கையின் தற்போதைய ஆட்சியாளர்கள் இந்தியாவுக்கு எதிராக அவ்வப்போது இராஜதந்திர ரீதியான செய்திகளை அனுப்புவதிலும் பின்னிற்கவில்லை.

தாங்கள் நினைத்தவர்கள் ஆட்சிக்கு வரவில்லை என்றால் அந்த ஆட்சியாளர்களை குழப்புவதிலும் அகற்றுவதிலும் அதிகார வர்க்கம் எப்பொழுதும் முனைப்பு காட்டும்.

அண்மையில் முன்னாள் ஜனாதிபதி ரணிலினுடைய கைது இந்தியாவுக்கு மறைமுக எச்சரிக்கை விடுப்பதாகவேதான் விமர்சனம் எழுந்துள்ளது. முன்னாள் இந்திய தூதுவர் மெலிந்த மொரகொட ஊடாக இந்தியா தனது நலன்களை இலங்கையில் நிலைநாட்ட முனைகிறது எனும் வாதம் இல்லாமல் இல்லை. அதற்கு உறுதுணையாக இருந்து தந்திர வியூகம் வகுப்பது ரணில் விக்கிரமசிங்க தான் எனும் எதிர்பார்ப்பும் உண்டு. ரணிலுடைய கைதுக்கு பின்னர் முன்னாள் இந்தியத் தூதுவர் டெல்லி போயிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையிலே முன்னாள் ஆட்சியாளர்கள் நூற்றுக்கணக்கில் ஊழலும் அதிகார துஷ்பிரயோகத்திலும் ஈடுபட்டு ஆதாரப்பூர்வமாக சிக்குண்டுள்ள போதிலும், அவர்களை எல்லாம் புறம் தள்ளி அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட ரணில் விக்கிரமசிங்கவைக் கைது செய்தது என்பது இந்தியாவுக்கு விடுக்கப்பட்ட மறைமுக எச்சரிக்கையே. அதன் நீட்சி தான் வட மாகாணத்துக்கான விஜயத்தின் போது திட்டமிடப்படாத பயணமாக கச்சதீவுக்கும் சென்று வந்தார் இலங்கை ஜனாதிபதி. அங்கு பிராந்திய வல்லாதிக்க சக்திகளுக்கு ஒரு போதும் அடிபணிய மாட்டேன் எனவும் உறுதி வழங்கி இருந்தார். அதுவும் இந்தியாவுக்கு விடுக்கப்பட்ட மறைமுக அச்சுறுத்தல் செய்தியே. ஒரு மிகச் சிறிய நாட்டின் தலைவர் பாரத தேசத்தை சீண்டுவதும் தூண்டுவதும் உணர்ச்சிவசத் தீர்மானங்களை எடுப்பதும் எதிர்காலத்தில் நிர்வாக இருப்புக்கு உகந்ததாக அமைந்து விடாது. ஆனாலும் அநுர குமார திஸநாயக்காவின் அண்மைய நகர்வுகள் என்பது, தான் இழந்து வரும் செல்வாக்கை மீட்டெடுப்பதற்கும், இந்திய ஏகாதிபத்தியத்துக்கு எதிரான மனோ நிலையில் உள்ள சிங்கள – பௌத்த தேசிய கோட்பாட்டு வாக்குகளை தன தாக்கிக் கொள்வதற்கும், வடக்கில் உள்ள மீனவர்களின் கணிசமான பகுதியினரின் ஆதரவு இருப்பைத் தக்க வைப்பதற்கும், இந்திய எதிர்ப்பு வாத செயல்பாடும் மனோநிலையும் மகிழ்ச்சியை ஏற்படுத்தலாம். மாறாக, அரசின் இருப்புக்கு குந்தகமாகவே அமையும்.

நிர்வாக ரீதியான அணுகுமுறைகள் எவ்விதமான நோக்கு நிலையில் அணுகப்படல்

தொடர்ச்சி ▼

# இந்தியாவைச் சீண்டுகிறாரா அநுர?



தொடர்ச்சி ▲

வேண்டும் என்கின்ற குறைந்தபட்ச புரிதல் கூட ஏற்படுத்தாமல் பிராந்திய வல்லரசோடு முரண்படுவது என்பது தனது இருப்புக்கு ஆபத்து என்பதனை ஜனாதிபதி உணரவில்லைப் போலும். அறிவார்த்தமான முன்யோசனை அற்ற செயற்பாடுகள் எதிர்காலத்தில் மிகப்பெரிய தாக்கத்தையும் பலவீனத்தையும் ஏற்படுத்தலாம். இந்தச் சீண்டல்களை இந்தியா சகித்துக் கொள்ளப் போகிறதா அல்லது இதற்கு எவ்விதமான பதிலை உணர்த்தப் போகிறது? இதன் பாதிப்பு ஒட்டுமொத்த இலங்கைக்கும் உரியதாக மாறும். அவ்வாறான நெருக்கடியை ஏற்படுத்துவது ஆட்சியாளர்களின் நிர்வாக திறனின்மையே கோடி காட்டுகிறது. ஆட்சியைத் தொடர்வதற்கு அபாயச் சங்காகவும் மாறக்கூடிய களச் சூழல் உருவாகலாம்.

ஆனாலும் இவ்விதமான அவமானங்களில் இருந்து இந்தியா எந்த பாடத்தையும் கற்றுக் கொள்வதாக இல்லை. இந்தியாவின் பலவீனமான அணுகு முறையை இலங்கை உணர்ந்ததன் வெளிப்பாடாகவேதான் பகிரங்கமாகவே தனது எதிர்ப்புணர்வை பதிவு செய்ய முனைந்திருக்கிறது இலங்கை. வழமை போன்று அமைதியாக இருந்து இரண்டக வேலையில் ஈடுபடுவதை தவிர இந்தியாவுக்கு வேறு வழியிருப்பதாகத் தெரியவில்லை. ஆனாலும் அதனால் ஈழத் தமிழர்களுக்கு எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை.

# எல்லயில் விபத்துக்குள்ளான பஸ்ஸில் இயந்திர கோளாறு

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு





எல்ல – வெல்லவாய வீதியில் விபத்தில் சிக்கிய பஸ்ஸில் இயந்திர கோளாறு இருப்பது முதற்கட்ட விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரான உதவி பொலிஸ் அத்தியட்சகர் எப்.யூ.வூட்லர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டார்.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தைச் சேர்ந்த நிபுணர் ஒருவர் பாகங்களை ஆய்வு செய்து, விடயத்தை உறுதிப்படுத்தும் அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார் என அவர் தெரிவித்தார்.

இருப்பினும், விபத்துக்கான சரியான காரணத்தை கண்டறிய மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த வியாழக்கிழமை இரவு எல்ல – வெல்லவாய வீதியில் பள்ளத்தாக்கில் கவிழ்ந்த பஸ்ஸின் சிதைவுகள் மீட்கப்பட்டு, மேலதிக பரிசோதனைக்காக இன்று அரச பகுப்பாய்வாளரிடம் ஒப்படைக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.



# ‘ரிவிதனவி’ சூரிய மின்சக்தி பூங்கா நிர்மாணப் பணி ஜனாதிபதி தலைமையில் தொடங்கி வைக்கப்பட்டது

இலங்கையின் மிகப்பெரிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முயற்சியான சியம்பலாண்டுவ “ரிவிதனவி“ சூரிய மின்சக்தி பூங்காவின் நிர்மாணப் பணிகள் நேற்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் தலைமையில் தொடங்கி வைக்கப்பட்டன.

மொனராகலை மாவட்டத்தில் சியம்பலாண்டுவ, கொட்டியாகல பகுதியில் 500 ஏக்கர் காணியில் முன்னெடுக்கப்படவுள்ள 140 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டிலான இந்த திட்டம், தேசிய மின்கட்டமைப்பில் 100 மெகாவோட் மின்சாரத்தைச் சேர்ப்பதுடன், ஆண்டுதோறும் 219 கிகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும்.

இந்த திட்டத்தின் ஊடாக டீசல் இறக்குமதியைக் குறைப்பதன் மூலமும், ஒவ்வொரு ஆண்டும் 150,000 மெட்ரிக் தொன் கார்பன் வெளியேற்றத்தைக் குறைப்பதன் மூலமும் 21 பில்லியன் ரூபா அந்நியச் செலாவணியைச் சேமிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

லக்தனவி லிமிடெட் மற்றும் விண்ட்ஃபோர்ஸ்பிஎல்சிஆகியவற்றுக்கு இடையேயான கூட்டு முயற்சியான ரிவிதனவி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மூலம் இந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

2027 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இதன் நிர்மாணப்பணிகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

2030 ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியிலிருந்து 70 வீத மின்சாரத்தைப் பெறுவதற்கான இலங்கையின் இலக்கை நோக்கிய ஒரு முக்கிய படியாக இந்த முயற்சி பார்க்கப்படுகிறது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.









# சர்வதேச துடுப்பாட்ட மைதானம் மண்டைதீவில் சாத்தியமாகுமா?

- ந.லோகதயாளன் -

மன்டைதீவில் சர்வதேச துடுப்பாட்ட மைதானம் அமைத்தல் என்ற கூற்றும் ஆண்டுதோறும் சொல்லும் ஐ.நா கூட்டத் தொடர் போன்று ஆகிவிட்டதோ என எண்ணத் தோன்றுகின்றது.

மன்டைதீவில் ஒரு சர்வதேச விளையாட்டு மைதானத்திற்கு நாட்டின் ஜனாதிபதி 2025-09-01 அன்று அடிக்கல் நாட்டினோம் என ஜனாதிபதியும், அமைச்சரும் படம் காட்டியமையைப் பார்க்கும்போது சினிமா படத்தில் வரும் நகைச் சுவைக் காட்சிதான் ஞாபகம் வருகின்றது. ஆளே இல்லாத றோட்டிற்கு எதுக்கடா பெல்லு (மணி) என வீதியோரமாக நின்றவர் கேட்பதுபோல் உள்ளது.

ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, அது அங்கீகரிக்கப்பட்ட பின்பு, அதற்கான நிதி ஒதுக்கீட்டு அனுமதிகள் பெறப்பட்டதன் பின்னரே பணி ஆரம்பத்திற்கான அடிக்கல் நாட்டப்படும்.

இந்த திட்டத்தைப் பொறுத்த வரையில் இதில் எந்தப் பணியுமே இடம்பெறாது, இப்பகுதி மக்கள் மட்டுமல்லர், முழு நாடுமே ஏமாற்றப்பட்டுள்ளது. எந்தவொரு திட்ட அனுமதியோ, நிதியோ முழுமையாக ஒதுக்கப்படாது விடினும் பகுதியளவில்கூட ஒதுக்கப்படவில்லை. குறைந்த பட்சம் 2026 ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் நிதி ஒதுக்குவேன் என்ற வாக்குறுதியையேனும் ஜனாதிபதி வழங்கவே இல்லை. அப்படியானால் எப்படி துடுப்பாட்ட மைதானம் அமையும்?

யாழ்ப்பாணத்தில் பொருத்தமான இடத்தில் ஒரு கிறிக்கெட் ஸ்டேடியம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை பல காலமாக இருந்து வருகின்றது. கடந்த ஆட்சிக் காலங்களிலும் மண்டைதீவில் சர்வதேச துடுப்பாட்ட மைதானம் அமைக்க எண்ணி திட்ட ஆய்வுகளை மேற்கொண்டபோதும் அவை சாதகமாக வரவில்லை எனத் தெரிகின்றது.

மண்டைதீவில் 1990 ஆம் ஆண்டிற்கு முன்பு சுமார் 3,000 மக்கள் வாழ்ந்துள்ளனர். அதுவே 1980களில் மேலும் அதிகமானோர் வாழ்ந்தனர். இவர்கள் 1990 ஆம் ஆண்டு போரின் காரணமாக இடம்பெயர்ந்தாலும் அதற்கு முன்பும் நல்ல மண் வளம் இருந்தபோதும் மக்கள் குடிபெயர ஆரம்பித்தனர். இதற்கு அங்கு போதிய உட்கட்டுமான அபிவிருத்தி கிடையாது என்பது காரணம். மிக மிக முக்கியமாக குடிதண்ணீர் வசதி இண்மையே தாக்கம் செலுத்தியது. ஏன் யாழ். நகரில் இருந்து 3 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இந்த மண்டைதீவு இன்றுவரை பற்றை வளரும் பூமியாக மட்டுமே அதிகாரிகள் பார்க்கின்றனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையை நெருப்பெட்டி அடுக்குகள் போன்று அமையாது மண்டைதீவில் முன்னர் இயங்கிய றேடியோ சிலோன் நிலத்திற்கு கொண்டு செல்லுங்கள் எனப் பல காலம் விடுத்த கோரிக்கை திரும்பியும் பார்க்கப்படுவதில்லை.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் இருந்து 3 மைல் தொலைவில் உள்ள இந்த மண்டைதீவையும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிர்வாகத்தின் கீழ் இயக்குமாறு விடுத்த கோரிக்கைக்கு செவி சாய்க்கப்படவில்லை. அங்கே தற்போதும் வாழும் மக்கள் 15 மைல் தொலைவில் உள்ள ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்திற்கே அலைக்களிக்கப்படுகின்றனர்.

இவை அனைத்திற்கும் அப்பால் குடிதண்ணீருக்கு சில கிணறுகளையும் கோடை காலத்தில் தண்ணீர் பவுசர்களின் வரவை எதிர்பார்த்தும் வாழும் நிலையிலேயே மக்கள் உள்ளமை இன்றுவரை மாற்றப்படவில்லை.

மணடைதீவையும் யாழ் நகரத்துடன் இணைத்து நகரமாக மாற்றுங்கள் எனக் கோரிக்கை முன் வைக்கப்படும் சூழலில் வைத்தியசாலைகளின் கழிவை எரியூட்டும் ஓர் எரியூட்டியை பொருத்தி நகரத்தை கேட்டவர்களுக்கு நரகத்தை வழங்கவே முற்படுகின்றனர் என அப் பகுதி மக்கள் குற்றம் சாட்டியதனையும் மறக்க முடியாது.

இந்த. நிலையில் சர்வதேச துடுப்பாட்ட மைதானம் வந்தால் அதனைச் சூழ பல விடுதிகள், உணவகங்கள், சுற்றுலா மையங்கள் வருவதன் மூலம் அபிவிருத்தி காணும் எனச் சொல்வது உண்மைதான். ஆனால் இதற்கு பொசிபுல் றிப்போட் எனப்படும் சாத்தியப்பாட்டு அறிக்கை என்ன சொல்கின்றது?

கடந்த ஆட்சியின்போதே மண்டைதீவில் சர்வதேச துடுப்பாட்ட மைதானத்திற்கு ஆராயப்பட்டது என்பதனை முன்பே குறிப்பிட்டேன். அதன்போது இன்னுமோர் உண்மையும் கண்டு பிடிக்கப்பட்டாலும் அதனை எவரும் வெளியே சொல்லவில்லை.

தொடர்ச்சி▼




# சர்வதேச துடுப்பாட்ட மைதானம் மண்டைதீவில் சாத்தியமாகுமா?

**தொடர்ச்சி▲**

ஏனெனில் அதனை அப் பகுதி மக்கள் கேள்விப் பட்டால் இத்தனை இடரின் மத்தியில்தானே நாம் வாழ்கினோம், அவ்வாறானால் நாம் மனிதர்கள் இல்லையா எனக் கேட்டுவிடுவர் என அதிகாரிகள் அஞ்சினர்.

அந்த விடயம்தான் மண்டைதீவில் சர்வதேச துடுப்பாட்ட மைதானம் அமைக்கும் முயற்சியை அப்போது தள்ளிப்போட காரணமாவும் அமைந்தது.

அதாவது ஒரு சர்வதேச துடுப்பாட்ட மைதானம் அமைந்தால் அதனை பராமரிப்பதற்கு துடுப்பாட்ட நிகழ்வு இடம்பெறாத நாளாயின் 65 ஆயிரம் லீற்றர் நீரும், போட்டிகள் இடம்பெறும் நாள்களில் ஒன்றரை லட்சம் முதல் இரண்டு லட்சம் லீற்றர் வரையான நன்நீர் கண்டிப்பாகத் தேவை என்பதுடன் அதனை இலகுவாகப் பெற்றுக்கொள்ளும் வழி முறையும் இருந்தே ஆக வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்ட போதே அதிகாரிகள் விழிபிதுங்கி நின்றனர்.

இவ்வாறு காணப்படும் குடி தண்ணீர்ப் பிரச்சினையை எவ்வாறு தீர்க்கப் போகின்றோம் என இதுவரை உறுதியான திட்டம் கூறாதபோதும், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை இப்போது நீர் விநியோக குழாய்களைப் புதைத்திருந்தாலும் அந்த குழாயில் எப்போது நீர் வரும் என அவர்களிற்கே தெரியுமா என்றால் சந்தேகம்தான். அவ்வாறு வந்தாலும் இந்த அளவு நீர் கிடைக்குமா, அதன் அருகே விரைந்து விடுதிகள், உணவகங்கள் வந்தால் அதற்கான நீர்விநியோக வசதியுண்டா என்பன தொடர்பில் எந்த அதிகாரியும் வாய் திறக்கவில்லை.

முதலில் அங்கே வாழும் மக்களிற்கு போதிய குடி தண்ணீரை வழங்கி மனிதம் வாழ வைத்து அவர்களிற்கு நம்பிக்கையூட்டுங்கள்.

(தொடரும்...)









# கிண்ணியாவில் பஸ் – பவுஸர் மோதி விபத்து

திருகோணமலை – மட்டக்களப்பு பிரதான வீதியின் கிண்ணியா பொலிஸ் நிலையம் முன்பாக நேற்று மாலை வாகன விபத்தொன்று ஏற்பட்டுள்ளது.

சுற்றுலா வந்த பஸ் ஒன்றும் எரிபொருள் பவுஸர் ஒன்றுமே நேருக்கு நேர் மோதியுள்ளன.

இச் சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் இல்லை எனவும் தெரியவருகிறது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

HIKVISION PLATINUM DEALER PARTNER
EZVIZ
NALIN Information Technologies (Pvt) Ltd
Computers of the North



HIKVISION EZVIZ
கமராக்களுக்கு எங்கும் இல்லாத
அதிகவிலைக் கழிவில்...
ஒருமுறை விஜயம் செய்யுங்கள்...
விலை வித்தியாசத்தை உணர்வீர்கள்...

Micro SD 128GB
KINGSTON 2550/-
LEXAR 2400/-
RUNAK 2150/-

CCTV Camera நிறுவுவதற்குரிய (Installation)
அனைத்துவிதமான பாகங்களும் விலை குறைக்கப்படுள்ளன.
MONITOR, 3C2V CABLE, HDD, BNC, CABIN, STAND, DVR, POWER PACK, TT CABLE, UPS, MOUSE, HDMI CABLE, WALL MOUNT
TERMS & CONDITIONS APPLIED

EZVIZ FREE INSTALLATION (Only for Specific Models) HOT LINE: +94 76 359 4367

JAFFNA
195/2 Parameswara Junction, Palaly Road, Jaffna.
077 766 7975 | 021 222 1121

KILINOCHCHI
No.44, A9 Road, Central College Opposite, Kilinochchi.
076 359 7610 | 021 228 5550

MANNAR
No.208 A, Hospital Road, Mannar.
076 359 4368 | 023 222 2500

NALIN IT EXCLUSIVE
No.51, Stanley Road, Jaffna. (Infront of BOC)
076 359 4359 | 021 221 0404









# ‘மாகாண சபையும் அதிகார பகிர்வும்’ வவுனியாவில் நேற்றுக் கருத்தரங்கு!

(கி.வசந்தன்)

மாகாண சபையும் அதிகார பகிர்வும் எனும் தொனிப் பொருளில் கருத்தரங்கு ஒன்று நேற்றையதினம் வவுனியா மாநகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் ஒழுங்கமைப்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தலைமையில் இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது.

இதன்போது “மாகாணசபை அதிகாரங்களும் அவற்றின் வீச்செல்லைகளும்”, “காணி அதிகாரமும் மாகாண சபையும்”, “மாகாணசபையும் தமிழ்த் தேசிய பரப்பின் பொறுப்பும்” போன்ற தலைப்பின் கீழ் இணைந்த வடமாகாண சபையின் நிர்வாக அதிகாரி செல்வின், முன்னாள் மாகாண காணி ஆணையாளர் க.குருநாதன மற்றும் எழுத்தாளர் கருணாகரன் ஆகியோரால் கருத்துரைகள் செய்யப்பட்டன.

இக்கருத்தரங்கில் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ப.சத்தியலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், மு.சந்திரகுமார், தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், மாநகர சபை மேயர் சு.காண்டீபன் மற்றும் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.











# குளியாப்பிட்டிய – குருநாகல் பிரதான வீதியில் மண் ஏற்றி வந்த டிப்பர் – கார் மோதி விபத்து!

**(உடப்பு க.மகாதேவன்)**

குளியாப்பிட்டிய – குருநாகல் பிரதான வீதி புகல்ல சந்தியில் டிப்பர் மற்றும் கார் மோதிய விபத்தில் கார் வீதியை விட்டு விலகி அருகில் இருந்த மரம் ஒன்றின் மீது மோதியது. மண் ஏற்றி வந்த டிப்பரும் கவிழ்ந்தது. இந்த விபத்துச் சம்பவம் கடந்த சனிக்கிழமை ஏற்பட்டுள்ளது.

இதன் போது டிப்பருக்குப் பாரிய சேதம் உண்டாகியுள்ளது. இதில் டிப்பர் சாரதி மற்றும் காரில் பயணித்தவர்களும் காயம் அடைந்தனர் எனக் குருநாகல் பொலிஸார் தெரிவித்தனர்.









# வாடகை ஓட்டோவில் ஆட்டைக் கடத்திய திருடன் ஓட்டோவைக் கைவிட்டு ஆட்டுடன் தலைமறைவு

## மட்டக்களப்பு நகரப் பகுதியில் நேற்று முன்தினம் சம்பவம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகர் பகுதியான கண்ணகை அம்மன் ஆலய வீதியில் நின்ற ஆடு ஒன்றை வாடகை ஓட்டோவில் திருடிக் கொண்டு சென்றவர் காத்தான்குடி பள்ளி வாசலுக்கு அருகில் வீதியில் ஓட்டோவை விட்டுவிட்டு ஆட்டுடன் தப்பி ஓட்டம் பிடித் திருக்கின்றார். ஓட்டோ உரிமையாளர் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுபற்றி தெரியவருவதாவது:-

காத்தான்குடியைச் சேர்ந்த ஓட்டோ உரிமையாளர் ஒருவர் தனது ஓட்டோவை நாள் வாடகையாக ஆயிரம் ரூபாவுக்கு அந்த பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்கியுள்ளார்.

ஓட்டோவை வாடகைக்கு எடுத்துச் சென்ற நபர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் நகரிலுள்ள கண்ணகை அம்மன் ஆலைய பகுதியில் ஓட்டோவில் சென்று அங்கு வீதியில் மேய்ந்து கொண்டிருந்த ஆடுகளில் ஒன்றைப் பிடித்து ஓட்டோவில் கொண்டு சென்றுள்ளார்.

இதனையடுத்து ஆட்டின் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செயதமையையடுத்து பொலிஸார் அந்த பகுதியிலுள்ள வீடுகளில் பொருத்தப்பட்டிருந்த சிசிரி கமராவில் பதிவு செய்யப்பட்ட வீடியோ காட்சிகளைக் கொண்டு ஓட்டோவின் இலக்கத்தைக் கண்டறிந்து அதன் உரிமையாளரை கண்டுபிடித்தனர்.

இதன்போது உரிமையாளர் தனது ஓட்டோவை வாடகைக்கு வழங்கினார் எனவும் இதுவரை ஓட்டோவைத் திருப்பி கொண்டு வந்து தர வில்லை எனத் தெரிவித்து ஓட்டோவை தேடியபோது பள்ளிவால் ஒன்றுக்கு அருகில் வீதியில் ஓட்டோ மற்றும் அதன் ஆவணங்களைக் கைவிட்டு விட்டு சம்பந்தப்பட்ட நபர் தப்பி ஓடி தலைமறைவாகியுள்ளமை தெரியவந்தது. இந்த நிலையில் ஓட்டோ உரிமையாளரைக் கைது செய்த பொலிஸார் ஓட்டோவை மீட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# காத்தான்குடி மீன்பிடி இலாகா வீதியில் அமைக்கப்பட்டும் வடிகானில் முறைகேடு

## 'கபே' அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் கண்டனம்

(கனகராசா சரவணன்)

காத்தான்குடி மீன்பிடி இலாகா வீதியில் நூறு மீற்றர் தூரம் வலது பக்கம் ஆரம்பித்து பிரதான வீதிவரைக்கும் கொண்டு செல்ல வேண்டிய வடிகான் அந்த பகுதியில் வீதியில் வீடு ஒன்று அமைந்திருப்பதால், அரசியல் செல்வாக்கினால் அதனை நிறுத்தி வீதியின் இடதுபக்கம்வடிகானைமாற்றி நிர்மாணிக்கப்பட்டு வருவது ஒரு முறைகேடான செயலாகும் என சமூக செயற்பாட்டாளரும் கபே அமைப்பின் மாவட்ட இணைப்பாளருமான தேசியமானிய ஏ.சி.எம். மீராஸாஹிப் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

வீதி அதிகார சபைக்குச் செந்தமான வீதியில் வலது பக்கமான பிரதான வீதி வரைக்கும் வடிகான் அமைக்க திட்டமிடப்பட்டு அமைக்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டு சுமார் நூறு மீற்றர் தூரம் வரை நிர்மானப்பணிகள் இடம்பெற்று வரும் நிலையில் அங்கு வீதியில் வீடு ஒன்ற அமைக்கப்பட்டிருப்பதால் வடிகானை தொடராது இடையில் நிறுத்திவிட்டு அதனை வீதியின் குறுக்கே திருப்பி இடது பக்கம் வடிகானை நிர்மாணித்து பிரதான வீதிவரைக்கு கொண்டு செல்லிம் ஒரு பிழையான முறை பின்பற்றப்படுகின்றது.

இந்த வீதியில் வீடு அமைக்க முதலில் யார் அனுமதி வழங்கினர்? இது அரசியல் செல்வாக்குடன் இப்படி நடக்கும் என்றால் எப்படி இந்த வீதியை அபிவிருத்தி செய்வது? இது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான வீதி. இவர்கள் என்ன பார்த்துக் கொண்டிருந்தனர்? வீதி அதிகாரசபை நகர சபை மீதும் நகரசபை, வீதி அதிகார சபை மீதும் என ஆளுக்கு ஆள் மாற்றிக் குறை கூறிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் மக்களுக்கு நியாயத் தீர்வு இல்லை. எனவே இது தொடர்பாக சம்மந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்த வேண்டும். - என அவர் மேலும் தெரிவித்தார்.













# மட்டக்களப்பு புல்லுமலைப் பகுதியில் தண்ணீர்த் தொழிற்சாலைக்கு எதிர்ப்பு!

## அனுமதித்தால் போராட்டம் வெடிக்கும் என எச்சரிக்கை

(வாலகிருஸ்ணா)

மட்டக்களப்பு புல்லுமலை பகுதியில் நிலத்தடி நீரை உறிஞ்சி விற்கும் தண்ணீர்த் தொழிற்சாலைக்கு அனுமதி வழங்கினால் அநுர அரசுக்கு எதிராக மக்கள் போராட்டம் வெடிக்கும் என தமிழரசுக் கட்சியின் ஏறாவூர் பற்று உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து ஊடகவியலாளர் சந்திப்பில் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஏறாவூர் பற்று பிரதேச சபை உறுப்பினருமான செ.நிலாந்தன், ஏறாவூர் பற்று பிரதேச சபை உபதவிசாளர் சர்வானந்தன் உட்பட உறுப்பினர்கள் இதன்போது கருத்து தெரிவித்தனர்.

குடிதண்ணீர் என்பது ஒரு விற்பனைப் பொருள் அல்ல. அது இறைவனால் மனிதர்களின், உயிரினங்களின் தாகத்தை போக்குவதற்காக படைக்கப்பட்ட இயற்கை வளம். அதனை உறிஞ்சி விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்குவதை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிறுத்த வேண்டும்.

மட்டக்களப்பு புல்லுமலை பகுதியில் கடந்த 2018 ஆம் ஆண்டு காத்தான்குடி நகர சபை தவிசாளர் ஊடாக மாகா தண்ணீர் தொழிற்சாலை என்ற பெயரில் நிலத்தடி நீரை உறிஞ்சி விற்கும் தண்ணீர் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் நடைபெற்ற போது அதனை கிராம மக்கள் உட்பட மாவட்டத்தில் உள்ள பொது அமைப்புகள், அரசியல் தலைவர்கள் என அனைவரும் எதிர்த்து போராட்டம் நடத்தினோம். அப்போது இருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசும், அதிகாரிகளும் மக்கள் போராட்டத்திற்கு மதிப்பளித்து அந்தத் தண்ணீர் தொழிற்சாலைக்கு அனுமதி வழங்காமல் கைவிட்டனர்.

அந்தத் தண்ணீர் தொழிற்சாலைக்கு அனுமதி வழங்க கூடாது என ஏறாவூர் பற்று பிரதேச சபையிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு இருக்கும் போது தற்போது மீண்டும் அதே தண்ணீர் தொழிற்சாலைக்கு வேறு ஒரு வர்த்தகரின் பெயரில் அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கடந்த ஏறாவூர் பற்று அபிவிருத்தி குழு கூட்டத்தில் அந்த வர்த்தகரால் புல்லுமலை தண்ணீர் தொழிற்சாலைக்கு அனுமதி கோரப்பட்டபோது, தண்ணீர் குறித்த ஆய்வு அறிக்கை கிடைத்தவுடன் அனுமதி வழங்கலாம் என அபிவிருத்தி குழு தலைவரும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பிரவு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இதுவரை 150 தண்ணீர் தொழிற்சாலைகள் உள்ளன எனக் கூறப்படுகிறது.

அதில் ஒரு சில தொழிற்சாலைகளைத் தவிர அனைத்துத் தொழிற்சாலைகளும் தண்ணீர் மிக மிக அதிகமாக உள்ள கம்பஹா போன்ற மாவட்டங்களிலேயே அமைந்துள்ளன. எம்மைப் பொறுத்த மட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமல்ல, இலங்கை எங்குமே நிலத்தடி நீரை உறிஞ்சி விற்கும் தண்ணீர் தொழிற்சாலைகள் அமைக்க அரசு அனுமதி கொடுக்க கூடாது.

தண்ணீர் ஒரு விற்பனைப் பொருளாக மாறுமாக இருந்தால் மனிதனால் தண்ணீரைப் பணம் கொடுத்து வாங்க முடியும். ஆனால் ஏனைய உயிரினங்கள் நீர் இன்றி அழிந்து போகும். விவசாயம், கால்நடை, குளங்கள் என அனைத்தும் முழுமையாக பாதிக்கப்பட்டு பிரதேசமே பாலைவனமாக மாறும் நிலை ஏற்படும்.

எனவே ஒட்டுமொத்த கிராம மக்களுக்கும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் புல்லுமலை தண்ணீர் தொழிற்சாலைக்கு அநுர அரசு ஒருபோதும் அனுமதி வழங்க கூடாது. மீறி வழங்கினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாரிய மக்கள் போராட்டம் வெடிக்கும். அவ்வாறான போராட்டத்திற்கு தமிழரசுக் கட்சி முன்னின்று ஆதரவு வழங்கும். – எனத் தெரிவித்தனர்.

# இலங்கைத் தமிழர்களுக்கு விதிவிலக்கு இந்திய அரசின் அறிவிப்பு வெளியானது

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழர்களின் நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்றியுள்ளார் இந்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா.

இம்மாதம் 4 ஆம் திகதி இந்திய உள்துறை அமைச்சகத்தால் மிக முக்கிய அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதன்படி, 2015 ஜனவரி 9ஆம் திகதிக்கு முன்பாக இந்தியாவுக்கு வந்து – தங்களை அகதிகளாக பதிவு செய்து கொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்கள், சட்டபூர்வமாக இந்தியாவில் தொடர்ந்து தங்க இந்திய அரசு அனுமதித்துள்ளது.

இதன் மூலம், அங்கீகரிக்கப்பட்ட பாஸ்போர்ட், விசா, பயண ஆவணங்கள் இல்லாமல் இந்தியாவில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் ஏதும் இருக்காது.

எனவே, அகதிகளாக பதிவு செய்து கொண்டு இந்தியாவில் இருக்கும் இலங்கைத் தமிழர்கள் “சட்டவிரோத குடியேறி”களாக (Illegal Immigrants) இனிக் கருதப்பட மாட்டார்கள்.

இந்தியாவில் இந்த ஆண்டு ஏப்ரல் முதல் நடைமுறைக்கு வந்துள்ள குடியேற்றம் மற்றும் வெளிநாட்டவர் சட்டத்தின்படி (Immigration and foreigners Act 2025) உரிய பாஸ்போர்ட், விசா இல்லாமல் இந்தியாவில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களுக்கு ரூ.5 லட்சம் அபராதமோ – 5 ஆண்டு சிறைத்தண்டனையோ – அல்லது இரண்டுமோ விதிக்கப்படும். தற்போதைய அறிவிப்பால், இந்தியாவில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு இந்தப் பிரச்சினை இருக்காது.

இதற்கு முன் 2015 டிசம்பர் 16 ஆம் திகதி இந்திய உள்துறை அமைச்சகம் ஒரு செயல் ஆணையை (Executive Order) வெளியிட்டிருந்தது. அதன்படி, 2015 ஜனவரி 9 ஆம் திகதிக்கு முன்பாக இந்தியாவுக்கு வந்து தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு விசா கட்டணம் ரத்து செய்யப்பட்டது. அனுமதிக்கப்பட்ட காலத்தைக் காட்டிலும் கூடுதலாக இந்தியாவில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு அபராதத்திலிருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டது. தற்போது எல்லாவித சட்ட நடவடிக்கைகளிலிருந்தும் இலங்கைத் தமிழர்கள் விதிவிலக்குப் பெற்றுள்ளனர்.

இந்திய உள்துறை அமைச்சகத்தின் அறிவிப்பை வரவேற்றுள்ள முன்னாள் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி, அமித் ஷாவுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.





# முன்னேஸ்வரத்தில் இரதோற்சவம்

(உடப்பு க.மகாதேவன்)

வரலாற்று சிறப்பு வாய்ந்த சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகாசமேத ஸ்ரீ முன்னைநாதர் சுவாமி ஆலயத்தின் வருடாந்தமஹோற்சவத்தில் பஞ்சரத பவனி இரதோற்சவ நிகழ்வு நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

பிரதான குருவும் தர்மகர்த்தாவுமாகிய ஆலயக் குருக்கள் பிரம்மஸ்ரீ ச.பத்மநாபக்குருக்களும் மற்றும் உதவிக்குருக்களும் இந்த நிகழ்வில் பங்குகொண்டனர். வசந்த மண்டபப் பூஜைகள் முடிவடைந்த பின்னர் சுவாமி உள்வீதி வலம் வந்து, அம்பாள் இரதம் ஏறி இரதோற்சவம்இடம்பெற்றது.

நாட்டின் பல பகுதியிலிருந்தும் இன, மதம் பாராது பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.













# நிறைவேற்றப்படாத நீதியின் மீள்பரிசீலனை...

## ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை குறித்த அறிக்கை வெளியீடு

**2025.09.08 ம் திகதி**
**பி.ப. 2.30 தொடக்கம் 5.30 வரை**

**இலங்கை மன்றக் கல்லூரியில்**

### கருத்துகள்

- சிரேஷ்ட ஊடகவியலாளர் சிவில் சமூக செயற்பாட்டாளர் **மந்தனா இஸ்மயில் அபேவிக்ரம**
- முரசு பத்திரிகையின் ஆசிரியர் **என்.வித்யாதரன்**
- பிரதம ஆசிரியர் அனித்தா பத்திரிகை **கே. டப்லியூ. ஜனரஞ்சன**

**ஊடகவியலாளர்கள் ஒருசிலரின் சுருக்கமான கருத்து கூறலுடன்**

## சகோதர உங்களை அன்புடன் அழைக்கிறோம்!

தொடர்புகளுக்கு 0763603737 | 0777234584 | 0762789001

ஏற்பாடு

අතුරුදහන්වූවන්ගේ පවුල් එකතුව
காணாமற்போனாரின் குடும்ப ஒன்றியம்
Families of the Disappeared

# மரண அறிவித்தல்

**தோற்றம்**

30 - 04 - 1931



**மறைவு**

05 - 09 - 2025

## திருமதி சிவசுப்பிரமணியம் சண்முகரத்தினம் அம்மா

யாழ்.கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியை வசிப்பிடமாகவும் கனடா Markham த்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் சண்முகரத்தினம் அம்மா அவர்கள் 05.09.2025 வெள்ளிக்கிழமை அன்று கனடாவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரைச்சாமி - மாணிக்கவல்லி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கார்த்திகேசு - சுந்தரவல்லி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான வைத்தியநாதன், சரஸ்வதி மற்றும் மங்கையற்கரசி, காலஞ்சென்றவர்களான திருஞானசம்பநதர், இராமச்சந்திரன் மற்றும் சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆயுள்வேத வைத்தியர் (நாவற்குழி) காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் அவர்களின் அன்புத் துணைவியாரும் ஸ்ரீதரன், ஸ்ரீபவன், கலாஸ்ரீ, ஸ்ரீபதி, ஸ்ரீரதி, ஸ்ரீராதா ஆகியோரின் பாசமிகு தாயாரும் கீதரஞ்சனி, சிவாஜினி, தங்கரட்ணராஜா, பத்மசோதி, தயாநிதி, குமரேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சஞ்சீவன், வாஷோ (இலண்டன்), சஞ்சுதா, றபஏல் (ஜேர்மனி), ஜெனனி, சஜீவ் (கனடா), யஸ்வினி,விஷ்ணு (கனடா), நிசோக், தாணியா (கனடா), மதினேஷ் (கனடா), காயத்திரி, கார்த்திக் (கனடா), மயூரி, தட்ஜெனன் (கனடா), வைஷ்ணவி (கனடா), அஷ்விந் (கனடா), அருண் (அமெரிக்கா), அர்ச்சனா(கனடா), நிர்ஷன் (கனடா), திவ்யா, சித்தார்த்தன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் வையந்தி, வினையன் (ஜேர்மனி), இசான், ஆதவ், ஆதித்தியா, ஆரியா (கனடா), ஆரியன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பூட்டியுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**Visitation:**

Chapel Ridge funeral Home, 8911 Woodbine Avenue, Markham, ON - L3R 5G1

On Tuesday, 9th September 2925 from 05:00 pm to :09:00 pm & On Wednesday, 10th September 2025 from 08:00 am to 09:00 am

**Service:**

Chapel Ridge Funeral Home

On Wednesday, 10th September 2025 from 9 am to 11:00 am

Followed by cremation 11:30 am at 2 Stalwart Industrial Drive, Gormley, ON - L0H 1G0

**தொடர்புகளுக்கு:**

ஸ்ரீதரன் - +16478088156

ஸ்ரீபவன் - +1905-2060970

ஸ்ரீபதி - +1 416-9023542

கலாஸ்ரீ - +491577 89 62915

ஸ்ரீரதி - +1 905201 9437 or Cell+1 416565 9468

தகவல்:

**குடும்பத்தினர்.**



# மித்தெனியவில் இரசாயன கிடங்கில் கைக்குண்டுகள், தோட்டாக்கள் மீட்பு

மித்தெனிய - தலாவ பகுதியில் ஐஸ் ரக போதைப்பொருளை தயாரிக்கப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ஐந்து கைக்குண்டுகளும், ரீ 56 ரகத்தைச் சேர்ந்த 18 தோட்டாக்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கைக்குண்டுகள் மற்றும் தோட்டாக்கள் காணியில் புதைக்கப்பட்டிருப்பதை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

முன்னதாக, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்குழு உறுப்பினரான கெஹெல் பத்தர பத்மேவினால் வழங்கப்பட்ட தகவலுக்கமைய, அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வில், 42 ஆயிரம் கிலோகிராம் நிறையுடைய ஐஸ் ரக போதைப்பொருள் உற்பத்திக்கு பயன்படும் மூலப்பொருள் மற்றும் இரசாயனம் அடங்கிய கலவை மீட்கப்பட்டிருந்தது.



# அனுபவமில்லாத இளைஞர்களை பஸ் செலுத்த அனுமதிக்க வேண்டாம்

அனுபவம் இல்லாத இளைஞர்களை பஸ் செலுத்த அனுமதிக்க வேண்டாம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, பஸ் உரிமையாளர்களிடம் இந்தக் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதற்கமைய, அனுபவம் இல்லாத இளைஞர்களுக்கு பஸ்ஸை செலுத்த கொடுப்பது பஸ் உரிமையாளர்களின் தவறாகும்.

பஸ் சாரதிகளின் உடல்நிலைமைகள் குறித்து தேடிப்பார்ப்பது மிகவும் அவசியமாகும் எனவும் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

# உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவர முயற்சி: பிரான்ஸ் ஜனாதிபதியுடன் மோடி ஆலோசனை



உக்ரைன் மீதான ரஷ்ய போரை முன்கூட்டியே முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் குறித்த கருத்துகளை பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரோனுடன் பகிர்ந்து கொண்டதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி நேற்று பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரனுடன் தொலைபேசியில் கலந்துரையாடினார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

“ஜனாதிபதி மேக்ரோனுடன் மிகச் சிறந்த உரையாடல் நடைபெற்றது. இந்தியா – பிரான்ஸ் இடையே பல்வேறு துறைகளில் ஏற்பட்டுள்ள ஒத்துழைப்பின் முன்னேற்றங்கள் குறித்து நாங்கள் நேர்மறையாக மதிப்பாய்வு செய்தோம்.

உக்ரைனில் நிகழும் மோதலை முன்கூட்டியே முடிவுக்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் உட்பட சர்வதேச மற்றும் பிராந்திய பிரச்சினைகள் குறித்த கருத்துகளைப் பரிமாறிக் கொண்டோம். உலக அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை வளர்ப்பதில் இந்தியா – பிரான்ஸ் மூலோபாய கூட்டாண்மை தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கும்.” என தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இம்மானுவேல் மேக்ரோன் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

“பிரதமர் நரேந்திர மோடியுடன் நான் தற்போது தொலைபேசியில் பேசினேன். இந்த வாரம் வியாழக்கிழமை பாரிசில் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி மற்றும் எங்களுக்கு நெருக்கமான நாடுகளின் தலைவர்களுடன் நாங்கள் மேற்கொண்ட பணிகள் குறித்த முடிவுகளை அவருக்கு வழங்கினேன்.

நியாயமான, நீடித்த அமைதி உக்ரைனில் நிகழ்வதற்கான விருப்பத்தை இந்தியாவும் பிரான்ஸும் பகிர்ந்து கொள்கின்றன. எங்கள் நட்பு மற்றும் கூட்டாண்மையை கட்டியெழுப்புவதன் மூலம் அமைதிக்கான இந்த பாதையை வகுக்க நாங்கள் தொடர்ந்து ஒன்றிணைந்து முன்னேறுவோம்.” என்று தெரிவித்துள்ளார்.

உக்ரைன் போரை முன்கூட்டியே முடிவுக்கு கொண்டு வரும் நோக்கில் பிரதமர் நரேந்திர மோடி முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். சமீபத்தில் சீனாவில் நடந்த ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சி மாநாட்டில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினைச் சந்தித்த பிரதமர் மோடி, அப்போது உக்ரைன் போரை முன்கூட்டியே முடிவுக்குக் கொண்டு வர வலியுறுத்தினார்.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக பிரான்ஸ் ஜனாதிபதியுடன் கலந்தாலோசனை மேற்கொண்டுள்ளார்.

# அமெரிக்காவுடனான உறவை பிரதமர் மோடி மதிக்கின்றார்

## எஸ். ஜெய்சங்கர் கருத்து



அமெரிக்காவுடனான இந்தியாவின் நல்லுறவுக்கு பிரதமர் நரேந்திர மோடி மிகுந்த முக்கியத்துவம் அளிக்கின்றார் எனவும் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடன் எப்போதும் வலுவான தனிப்பட்ட உறவை கொண்டுள்ளார் என்றும் வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஜெய்சங்கர் மேலும் தெரிவிக்கையில்,

“அமெரிக்காவுடனான நமது நல்லுறவுக்கு பிரதமர் மோடி மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறார். ஜனாதிபதி ட்ரம்ப் விடயத்தில், பிரதமர் மோடி எப்போதும் மிகச் சிறந்த தனிப்பட்ட நல்லுறவைக் கொண்டுள்ளார். ஆனால் விஷயம் என்னவென்றால், நாங்கள் அமெரிக்காவுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறோம். இந்த நேரத்தில், அதற்கு மேல் என்னால் சொல்ல முடியாது.” என்று அவர் கூறினார்.

ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்குவது தொடர்பாக, இந்தியா மீது அமெரிக்கா 50 சதவீத வரி விதித்துள்ளதால், இரு நாடுகளுக்கு இடையிலான உறவு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், சில நாள்களுக்கு முன்பு ட்ரம்ப் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில் இருண்ட சீனாவிடம் இந்தியாவை இழந்துவிட்டோம் என்று தெரிவித்திருந்தார்.

அதனையடுத்து, வெள்ளிக்கிழமை வொஷிங்டனில் பேசிய ட்ரம்ப், “நான் எப்போதும் மோடியுடன் நண்பராக இருப்பேன், அவர் ஒரு சிறந்த பிரதமர். ஆனால் இந்த குறிப்பிட்ட தருணத்தில் அவர் என்ன செய்கிறார் என்பது எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் இந்தியாவும், அமெரிக்காவும் ஒரு சிறப்பான உறவைக் கொண்டுள்ளன. எனவே கவலைப்பட ஒன்றுமில்லை.” என்று கூறினார்.

ட்ரம்ப்பின் இந்தப் பேச்சுக்கு எக்ஸ் தளத்தில் பதிலளித்த பிரதமர் மோடி, “ஜனாதிபதி ட்ரம்பின் உணர்வுகளையும், எங்கள் உறவுகள் குறித்த நேர்மறையான மதிப்பீட்டையும் ஆழமாகப் பாராட்டுகிறேன், முழுமையாகப் பகிர்ந்து கொள்கிறேன். இந்தியாவும் அமெரிக்காவும் மிகவும் நேர்மறையான மற்றும் தொலைநோக்கு பார்வையுடைய நல்லுறவை கொண்டுள்ளன.” என்று தெரிவித்திருந்தார்.

# விஜயின் தமிழக வெற்றிக் கழகத்தின் பிரசாரக் கூட்டத்திற்கு அனுமதி மறுப்பு

திருச்சி சத்திரம் பஸ் நிலையம், உள்ளிட்ட 4 இடங்களில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் பிரசாரம் நடத்தத் திட்டமிட்டிருந்தார்.

ஆனால், தற்போது விஜய்யின் பிரசார கூட்டத்திற்கு பொலிஸ் அனுமதி மறுத்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விஜய், தொண்டர்களிடையே உரையாற்ற உள்ள நிகழ்வை சத்திரம் பொலிஸ் நிலையத்திற்கு பதில் திருச்சி மரக்கடை, உழவர் சந்தை பகுதியில் நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திருச்சியை அடுத்து அரியலூர், குன்னம், பெரம்பலூர் பகுதிகளில் விஜய் சுற்றுப்பயணம் செய்யவுள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# இந்தியாவையும் ரஷ்யாவையும் சீனாவிடம் இழந்துவிட்டோம்

## ட்ரம்ப் கவலை





இருண்ட சீனாவிடம் இந்தியாவையும் ரஷ்யாவையும் இழந்துவிட்டோம் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

சீனாவில் நடைபெற்ற உச்சி மாநாட்டில் மூன்று தலைவர்களும் ஒன்றாக இருக்கும் புகைப்படத்துடன் ட்ரம்ப் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய இறக்குமதி பொருள்கள் மீது அமெரிக்கா 50 சதவீத வரி விதித்ததால் இந்தியா – அமெரிக்கா இடையேயான உறவில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகக் கருதப்படும் நிலையில், ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த மூன்று நாடுகளும் நீண்ட மற்றும் வளமான வாழ்க்கையை ஒன்றாக வாழ வாழ்த்துகிறேன் என்றும் கிண்டலாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவைக் குறிப்பிட்டு ட்ரம்ப் வெளியிட்டுள்ள இந்த கருத்து, சர்வதேச அளவில் பேசுபொருளாகி வருகிறது.

இருப்பினும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் இது குறித்து புதுடில்லியில் செய்தியாளர்களிடம் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# காசாவில் உள்ள பாலஸ்தீனியர்கள் உடனடியாக வெளியேற வேண்டும்

## இஸ்ரேலியப் படைகள் அறிவிப்பு



காசா நகரில் வசிக்கும் பாலஸ்தீனியர்களை உடனடியாக வெளியேறுமாறு இஸ்ரேலியப் படைகள் தெரிவித்துள்ளன.

பாலஸ்தீனியர்களை தென் பிராந்தியத்திற்குத் தப்பிச் செல்லுமாறு அவர்கள் கூறியுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசாவைத் தொடர்ந்து தாக்கி வரும் இஸ்ரேலிய நடவடிக்கைகள் வடக்கிலிருந்து மேற்கொள்ளப்படுவதாக வெளிநாட்டு அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

காசாவில் இரண்டு வருடங்களுக்கும் மேலாக இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்கியுள்ள பாலஸ்தீன மக்களுக்கு இந்த அறிவிப்பு மற்றுமொரு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

தெற்கு காசாவில் உள்ள கான் யூனிஸ'ில் உள்ள ஒரு நியமிக்கப்பட்ட கடலோரப் பகுதிக்கு உடனடியாக தப்பிச் செல்லுமாறு இஸ்ரேலியப் படைகள் காசா மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளன.

பாலஸ்தீனியர்களுக்கு உணவு, மருந்து, தங்குமிடம் போன்ற வசதிகளைச் செய்து கொடுத்துள்ளதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலால் நியமிக்கப்பட்டுள்ள பகுதி இராணுவம் இல்லாத வலயம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வியாழன், காசா பகுதியின் பாதி பகுதி இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் இருப்பதாக இஸ்ரேல் கூறியது, ஆனால் தற்போது காஸாவின் 75 வீதம் தனது கட்டுப்பாட்டில் இருப்பதாக இஸ்ரேல் கூறுகிறது.

காசாவில் இஸ்ரேல் தனது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியதால், நரகத்தின் வாயில்கள் திறக்கப்பட்டுள்ளன என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 07.09.2025

## மேஷம்

இன்று சாதாரணமான நாள். நீங்கள் பெரியவர்களைக் கூட மகிழ்விக்கும் இனிமையான வார்த்தைகளை பேசு வீர்கள். இறை மந்திரங்கள் சொல்வது இசை கேட்பது மன ஆறுதலை அளிக்கும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்களுக்கு புதிய பணிகள் கொடுக்கப்படும். அது சவால்கள் நிறைந்ததாக இருக்கும்.

உங்கள் தந்தையுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். குடும்ப அங்கத்தினர்களின் நல்லாதரவு பெறுவீர்கள். இன்று காதலர்களுக்கு உகந்த நாள் அல்ல.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். இன்று கணிசமான தொகை பராமரிப்பீர்கள்.

ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

## ரிஷபம்

உங்கள் செயல்களை சீராக மேற் கொள்வதில் நீங்கள் வெற்றி பெறுவீர் கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பது நல்லது.

உங்கள் பணிகள் பாராட்டைப் பெறும். உங்கள் பணிகளை நீங்கள் அனுசரித்து கவனமாக மேற் கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் சிறப்பான நேரத்தை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் காதலருடன் உங்கள் வாழ்கைக்கு திட்டமிடும் நாள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிக்க இயலும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்க ளிடம் நம்பிக்கை எண்ணம் காணப்படும். இது உங்கள் ஆரோக்கியத்தில் பிரதி பலிக்கும்.

## மிதுனம்

ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை பெற்றுத் தரும். புனித யாத் திரை ஒன்றை மேற்கொள்வீர்கள். அது உங்களுக்கு திருப்தி உணர்வை அளிக் கும்.

நீங்கள் மிகவும் சிறப்பாக பணி யாற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கு அங்கீகாரமும் பாராட்டும் கிடைக்கும்.

இன்று காதலுக்கு உகந்த நாள். உங்கள் துணையுடன் அன்பாக இருப்பீர்கள். உங்கள் உறவினர்களிடம் கலந்தா லோசித்து உங்கள் திருமணத்துக்காகத் திட்டமிடலாம்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிக்கும் நிலையில் இருப்பீர்கள்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சனையும் காணப்படாது. இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## கடகம்

இன்றைய நாள் சராசரிக்கும் அதிக மான பலன்களை அளிக்கும். உங்கள் புத்திசாலித்தனத்தை நன்கு பயன்படுத்து வீர்கள். உங்கள் தரத்தை மேம்படுத்தவும் வெற்றி பெறவும் நீங்கள் முயற்சி எடுக்க லாம்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. நீங்கள் உங்கள் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருப்பீர்கள்.

உங்கள் துணையை சந்தித்து உங்கள் உறவை மேம்படுத்த முயல்வீர்கள். உங்கள் துணையுடன் வெளிப் படையக இனிமையான வார்த்தைகளை பேசுவது சிறந்தது.

நீங்கள் சம்பாதித்த பணத்தை ஆன்மீகக் காரியங்களுக் காக பயன்படுத்துவீர்கள். இதன் மூலம் மனதிருப்தியை அடைவீர்கள்.

## சிம்மம்

இன்று சுறுசுறுப்பாக காணப்படு வீர்கள். வெற்றி காண கடினமாக உழைக்க வேண்டும். சிறந்த தகவல் தொடர்பாடல் மூலம் நீங்கள் நல்ல பலனைப் பெறலாம்.

பணியிடச் சூழல் இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் பேச்சின் மூலம் சிறந்த வளர்ச்சி பெறுவீர்கள். இது உங்களுக்கு வழிகாட்ட உதவும்.

இன்று கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது என்ப தால் காதலுக்கு உகந்த நாள் அல்ல. காதல் பாதிக்காமல் இருக்கவும் நன்கு வளரவும் புரிந்துணர்வு அவசியம்.

வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். வருவதைக் கொண்டு நிர்வகிக்க வேண்டும்.

பதற்றம் காரணமாக தோள் வலி மற்றும் எரிச்சல் காணப்படும். மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.

## கன்னி

வெற்றி பெறுவதற்கான தைரியமும் உறுதியும் உங்களிடம் காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

உங்கள் பணிகளை திறமையுடன் ஆற்றுவீர்கள். உங்கள் சக பணியா ளர்களுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள்.

காதலில் அன்பு மிகுந்து காணப்படும். உங்கள் துணையுடன் உங்கள் எதிர் கால வாழ்க்கைக்கு திட்டமிட உகந்த நாள்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங் கள் கடின உழைப்பிற்கு நீங்கள் ஊக்கத் தொகை பெறுவீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.

## துலாம்

இன்று மிகவும் சிறப்பான நாளாக காணப்படாது. இன்று உங்கள் செயல்களை சிறப்பாக திட்டமிட வேண்டும். எந்த செயலையும் செய்வ தற்கு முன் நன்கு யோசிக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வும். எதற்கும் உணர்ச்சி வசப்படாதீர்கள்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. நீங்கள் அதிக பணிகளை சுமக்க நேரும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் காதலை வெளிபடுத்த இது உகந்த நாள் அல்ல. உங்கள் துணையுடன் இன்று அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி மகிழ்ச்சிகரமாக காணப்படாது. இன்று அதிக செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

## விருச்சிகம்

இன்று சற்று மந்தமான நாள். எந்த முடிவையும் எடுப்பதற்கு முன் யோசிக்க வேண்டும். பலன்கள் நீங்கள் எதிர்பார்த்த படி காணப்படாது. நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும். அதிகப் பணிகள் மற்றும் கவனக் குறைவே இதற்குக் காரணம்.

உங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்வதை கடின மாக உணர்வீர்கள். உங்கள் காதலருடன் சண்டை ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் துணையிடம் வெளிப்படையாக அணுகுங்கள்.

இன்று பண விரயம் காணப்படும். தேவையற்ற செலவுகள் செய்ய நேரும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.09.2025




எதிர்பாராத வகையில் நன்மை கிடைபதற்கான வாய்ப்புள்ள நாள். இன்றைய சூழ்நிலைகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

இன்று பணியில் உங்கள் சக பணி யாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். நீங்கள் மிகவும் கவனமுடன் பணியாற்றுவீர்கள்.

இன்று உங்கள் காதலருடன் திருமணம் நடக்க வாய்ப்புள்ளது. என்றாலும் சரியான பாதையில் முயற்சி-க்க வேண்டும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று முழுவதும் நீங்கள் ஆரோக்கியமாக இருப் பீர்கள்.




இன்று உங்களுக்கு சுமாரான பலன்கள் கிடைக்கும். உங்கள் மனதில் தேவையற்ற குழப்பங்கள் காணப்படும். இன்று அனுசரித்துப் போவது நல்லது. எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

நீங்கள் இன்று சிறப்பாக பணியாற்றுவீர்கள். என்றாலும் சக பணியாளர்களுடன் வாக்குவாதங்களில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது.

உங்கள் காதலருடன் இனிமையான தருணமாக காணப்படாது. வாக்குவாதம் எழ வாய்ப்புள்ளது.

நிதி நிலைமையில் மிதமான வளர்ச்சி காணப்படும். இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும்.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று சராசரிக்கும் அதிகமான பலன்கள் கிடைக்கும். ஆன்மீக ஈடு பாட்டின் மூலம் நீங்கள் மன திருப்தி பெற இயலும்.

உங்களின் பணிகள் எந்த தடையும் இல்லாமல் நடக்க இன்று நீங்கள் பொறுமையை இழக்காமல் புத்திசாலித்தனத்துடன் செயல் பட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியான அனுபவமாக இருக்கும்.

பங்கு வர்த்தகம் போன்ற புதிய முதலீடுகள் திருப்தி அளிக்கும். இவற்றின் மூலம் திருப்தியான பண வரவு காணப்படும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பரா மரிப்பீர்கள்.




இன்று மந்தமான நாளாக இருக்கும். உங்கள் உணர்ச்சி மற்றும் உணர்வு களை கட்டுப்படுத்த வேண்டும். பொறு மையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப் படும். உங்கள் பணிகளை கவனமாக முடிக்க நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் தாயுடன் கருத்து வேற்றுமை ஏற்படலாம்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. நீங்கள் தேவையற்ற செலவுகளை செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று சில அசௌகரியங்கள் காணப்படும். இது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். தூக்கமின்மை பாதிப்பு அல்லது தோல் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது.

# எல்ல - வெல்லவாயவில் விபத்துக்குள்ளான பஸ்ஸின் பாகங்கள் ஆய்வு செய்யப்படவுள்ளன



எல்ல-வெல்லவாய வீதியில் 1,000 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத் துக்குள்ளான பஸ் நேற்று அதிகாலை பெரும் முயற்சியின் மூலம் மீட்கப்பட்டது.

பஸ்ஸின் சிதைவுற்ற பாகங்கள் நேற்று காலை எல்ல பொலிஸ் நிலை யத்துக்கு கொண்டு செல்லப்பட்டன.

இதனிடையே பஸ்ஸின் பாகங்கள் எதிர்வரும் 8 ஆம் திகதி அரச இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட உள்ளன.

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் தலைவர் வைத்தியர் அரோஷ வித்யாபூஷண உள்ளிட்ட குழுவினர் விபத்து நடந்த இடம் மற்றும் பஸ்ஸின் பாகனங்களை ஆய்வு செய்த னர்.

இதற்கிடையில், விபத்துக்குள்ளான பஸ் 2023 ஆம் ஆண்டு தேசிய போக்கு வரத்து ஆணைக்குழுவின் பதிவிலிருந்து நீக்கப்பட்ட பஸ் என்று போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன கூறுகிறார்.

அதன்படி, இந்த பஸ் பயணிகள் போக்குவரத்து தொடர்பாக சரியான ஒழுங்குமுறைக்கு உட்பட்டதல்ல என்று அவர் சுட்டிக்காட்டுகிறார்.

தேசிய போக்குவரத்து ஆணையக் குழுவில் பயணிகள் போக்குவரத்து பஸ்களின் தரநிலைகள் சரிபார்க்கப்பட் டாலும், பொழுதுபோக்கு பயணங்க ளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் பஸ்களை ஒழுங்குபடுத்த எந்த சட்டங் களும் இல்லை என்று பிரதி அமைச் சர் பிரசன்ன குணசேன சுட்டிக்காட்டு கிறார்.